**இலங்கை உள்ளூராட்சி நிறுவகம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று உள்ளடங்கலாக, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின்

காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு பரப்பெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம்

மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- நிறுவகம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

------------------------------------------------------------------------------------------------------------------------

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| தொடர்புடைய நியமத்துடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 02** | | |
| நியமத்தின் 30 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் ரூபா 356,817 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. செயற்பாட்டு இலாபத்தினை கணிப்பிடுகையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 356,817 தொகையான சேமிப்புக் கணக்குகள் தொடர்பில் பெறப்பட்ட வட்டி மீண்டும் நிதியீட்ட நடவடிக்கைகளின் கீழ் கூட காட்டப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றோம். 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மீது சமமான சரிப்படுத்தல்களினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களினை துல்லியமாக தயாரிப்பதற்கு முகாமைத்துவம் கவனஞ் செலுத்த வேண்டும். |
| **(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09** | | |
| நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம், இருப்பானது கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி இதில் எது குறைவோ அந்தப் பெறுமதியில் அறிக்கையிடப்படல் வேண்டும். இருப்பினும், ரூபா 1,517,202 தொகையான காலங்கடந்த வெளியீடுகளின் இருப்பு தேறிய தேறக்கூடிய பெறுமதியை கணிப்பிட்டிராது | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். இந்த வெளியீடுகளின் இருப்பு தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், பௌதீக மெய்மையாய்வினூடாக இருப்புக்களினை | நிதிக்கூற்றுக்களினை துல்லியமாக தயாரிப்பதற்கு முகாமைத்துவம் கவனஞ் செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| கிரயத்தில் அறிக்கையிடப்பட்டிருந்தது. | கணிப்பிடுவதற்கு மற்றும் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிப்படுத்தல்களினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதி நிலைமைக் கூற்றின் உரிமையின் கீழ் குறிப்பிட்ட ரூபா 508,434,195 அரசு மூலதன மானியங்களின் கணக்கீட்டுடன் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்காத அதேவேளை ரூபா 2,601,484 கூட்டுத்தொகையான மானியங்களுடன் தொடர்புடைய சொத்துக்களினை இனங்கண்டு காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றோம். மானியங்களினை கணக்கிடுவதற்கு மற்றும் காலக்கழிவிற்கான கொள்கையொன்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மானியங்களின் கணக்கிடுகை மற்றும் காலக்கழிவுகளின் கணக்கீட்டிற்கான கொள்கை யொன்று அறிமுகப் படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) வருமானக் கூற்றில் வட்டி வருமானம் ரூபா 131,634 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றோம். 2017 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகளினை தயாரிக்கையில், சேமிப்பு கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டிய மீதியொன்று தொடர்புடைய | வட்டி வருமானம் துல்லியமாக கணிப்பிடப்பட்டு கணக்கிற்கு கொண்டு வரப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பெறவேண்டிய கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக வருமானமொன்றாக கருத்திற் கொள்ளப்பட்டிருந்ததுடன் பிழை ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களினூடாக தொடர்புடைய திருத்தங்களினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.4 பொருத்தமற்ற விலைமதிப்பு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1999 இன் 31 ஆம் இலக்க இலங்கை உள்ளூராட்சி நிறுவகச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம், ஆராய்ச்சி மற்றும் அறிவுரை சேவைகளினை பிரதான பயிற்சி தொழிற்பாடு உள்ளடக்க வேண்டியதுடன் நிறுவகத்தின் செயற்பாட்டு செலவின மதிப்பீடுகளில் மீண்டெழும் செலவினத்தின் கீழ் மதிப்பிடப்படல் வேண்டும். அதற்குப் பதிலாக, ரூபா 30,000,000 தொகையொன்று மனிதவள அபிவிருத்திக்கான மூலதனச் செலவினத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த நிறுவகத்தின் பிரதான தொழிற்பாடொன்றாகக் காணப்படுகின்ற உள்ளூராட்சி நிறுவகங்கள் மற்றும் பொது பிரதிநிதிகளின் உத்தியோகத்தர்களின் பயிற்சிக்காக வருடாந்தப் பாதீட்டினூடாக மூலதனப் பெறுகைகளின் கீழ் பண ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்துக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் நடாத்தப்படவுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கு உண்மைகளினை சமர்ப்பிப்பதற்கு மற்றும் | தொழில்பாட்டுச் செலவினத்திற்காக கோரப்படும் ஏற்பாடுகள் மீண்டெழும் செலவினத்தின் கீழ் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அறிவுறுத்தல்களினைப் பெற்று அதற்கமைய நடவடிக்கைகளினை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**1.6 பெறவேண்டிய பணம்**

----------------------------------

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பதவி நீக்கப்பட்ட மற்றும் இடைநிறுத்தப்பட்ட 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 631,297 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முகாமைத்துவம் கவனஞ் செலுத்தயிருக்கவில்லை. ராஜினாமாச் செய்திருந்த 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 85,416 கடன் மீதிகள் நீண்டகாலப்பகுதியொன்றுக்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏனைய கடன் மீதிகள் தொடர்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகளினைத் தவிர ரூபா 10,000 வை விடக் குறைவாக அறவிடமுடியாது காணப்படும் கடன் மீதிகளினை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிச்சயமாக அறவிடகூடியதாகக் காணப்படும் கடன் மீதிகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) நிறுவகத்தினால் 2015 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட நாட்குறிப்பேடுகளுக்காக ரூபா 492,000 தொகை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் 2018 ஆம் ஆண்டின் போது கூட அறவிடப்பட்டிருக்கவில்லை. | பல தடவைகள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தத் தொகை இதுவரை அறவிடப்படவில்லை. | அறவிடப்பட வேண்டிய பணத்தின் அறவிடுகை தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை** | | | |
| (ை) ஐஐ ஆம் அத்தியாயம் 13.1.2 ஆம் பிரிவு | போதனையாளர் பதவிக்காக (நிதி மற்றும் முகாமைத்துவம்) வேண்டப்படும் அதிஇழிந்த தகைமைகளினை கொண்டிராத உத்தியோகத்த ரொருவருக்கு பதில் கடமை நியமனமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 96,624 தொகையொன்று பதில் கடமை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | கட்டுப்பாட்டு சபையின் 160/03 தீர்மானத்தின் பிரகாரம், நிறுவகத்தின் அத்தியாவசிய கடமைகளுக்காக 6 மாதங்கள் காலப்பகுதி யொன்றுக்காக உத்தியோகத்தர் நியமிக்கப் பட்டிருந்தார். | ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தாபனக் கோவையின் பிரகாரம் சம்பளங்கள் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |
| (ைை) ஐஐ ஆம் அத்தியாயம் 15.1(ைை) ஆம் பிரிவு | உரிய திகதிகளில் வினைத்திறமை காண் பரீட்சைகளினை நடாத்தியிருக்காமை காரணமாக 32 உத்தியோகத்தர்களினை சேவையில் நிரந்தரமாக்கல் பதவியுயர்வுகள் என்பன | அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டப்படுகின்ற நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் படுகின்றது. | தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டவா று உரிய திகதிகளில் வினைத்திறமை காண் பரீட்சைகளினை நடாத்துவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உத்தியோகத்தர் களினை சேவையில் நிரந்தரமாக்கல் மற்றும் பதவியுயர்வுகள் என்பன முறையாக வழங்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம், கணனிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவுகளினை ரூபா 5,411,945 தொகையான முன்னைய ஆண்டின் மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 2,836,486 மிகையொன்றாகக் காணப்பட்டிருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 2,575,459 பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. விசேட செயற்திட்டங்களின் வருமானம் ரூபா 6,364,848 இனால் குறைவடைந்தமை மற்றும் அரச பங்களிப்பு ரூபா 4,905,000 இனால் குறைவடைந்தமை இந்தப் பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்குப் பகுப்பாய்வு

(அ) விசேட செயற்திட்டங்களின் வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 6,364,848 அல்லது 33.38 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்படுவதுடன் மீளாய்வாண்டின் போது பங்கேற்பு கட்டுப்பாட்டை மேம்படுத்துவதற்காக சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களினை வலுப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு உள்ளூராட்சி நிறுவகங்கள் மற்றும் உள்ளூர் சேவைகளினை முன்னேற்றமடையச் செய்தல் செயற்திட்டம் போன்ற செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தமை மேற்குறித்த குறைவிற்கு காரணங்களாகக் காணப்பட்டன. மேலும், ஏனைய வருமானம் ரூபா 2,899,383 அல்லது 70.14 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது.

(ஆ) தாபன மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 1,309,829 அல்லது 3.76 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், மனித வள அபிவிருத்தி செலவினம் ரூபா 3,601,085 அல்லது 14.72 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் பின்வருமாறு.

| **விகிதம்** | **ஆண்டு** | |
|---|---|---|
| | **2018** | **2017** |
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் | 7.69:1 | 4.55:1 |
| விரைவு சொத்துக்கள் விகிதம் | 7.40:1 | 4.39:1 |

நிறுவகத்திற்கான அதிஉத்தம நடைமுறைச் சொத்துக்கள் தேவைப்பாடு மற்றும் விரைவுச் சொத்துக்கள் தொடர்பில் மதிப்பீடொன்றை நடாத்தியிருக்காமை காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் என்பன உயர் பெறுமதியொன்றை பிரதிபலித்தது. அண்ணளவாக 70 சதவீத காசு மிகை மீதிகள் முதலீடொன்றிற்காக அளிக்கப்பட்டிராது வங்கி சுற்றோட்டக் கணக்குகளில் தொடர்ந்தும் காணப்பட்டமையினால் அச்த சொத்துக்கள் ஆண்டு முழுவதும் விளைவற்று தொடர்ந்து காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் நிறுவனத்தின் சாரதியொருவருடன் கூட்டிணைவுக்கு உள்ளாகியிருந்ததுடன் எரிபொருள் கட்டளைகளினூடாக காசு மோசடியொன்றை மேற்கொண்டிருந்த போதிலும், அவர்க்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் 2017 நவம்பர் 21 இல் கட்டுப்பாட்டு சபையின் தீர்மானத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டிருந்தார். | அந்தக் காலப்பகுதியில் (2008 சனவரி 28 ஆந் திகதிய கட்டுப்பாட்டு சபையின் 71/06 ஆம் இலக்க சபைப் பத்திரம்) முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நிர்மாணமொன்றின் அடிப்படையில் அது மேற்கொள்ளப்பட்டது. | முறையாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் பிரகாரம் மோசடிகள் மற்றும் வழக்கள் தொடர்பில் நிறுவனகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (i) உள்ளகக் கணக்காய்வாளரிடமிருந்து அவரின் பதவி விலகலை ஏற்பதற்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய ரூபா 256,983 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல நிபந்தனைகளின் அடிப்படையில் பதவி விலகல் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | பதவி விலகலை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் பதவி விலகல் தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | சேவையிலிருந்து பதவி விலகிய உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்க்கு உரித்தான பணிக்கொடை செலுத்துகை, செலுத்தப் பட்டிருக்காமையினால், தொழில் உதவி ஆணையாளர்க்கு ரூபா 93,857.40 தொகையான மிகைக் கட்டணத்தை அல்லது 20 சதவீதத்தினை வைப்புச் செய்வதற்கு தொழில் ஆணையாளர் அறிவித்திருந்தார். | நிர்வாக உத்தியோகத்தரிடமிருந்து நிலுவை அறிக்கை பெறப்படும் வரை 2018 ஆகஸ்ட் 23 இல் நடாத்தப்பட்ட கட்டுப்பாட்டு சபையின் 163 ஆவது கூட்டத்தில் கூட, பணிக்கொடையின் செலுத்துகை தீர்மானத்தில் தாமதம் ஏற்பட்டமை காரணமாக பிற்போடப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர் களின் அலட்சியம் காரணமாக ஏற்படுகின்ற நட்டங்கள் மற்றும் சேதங்களுக்கு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் நேரடியாக பொறுப்புடையவர்க ளாகக் காணப்படுகின்றனர். |
| (ஆ) | காசு மோசடியொன்று தொடர்பில் முறையானதொரு ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டிருந்த மேலதிக பணிப்பாளர் மற்றும் பொறியியல் ஆலோசகர் சேவையின் இரண்டு நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள் 2016 சனவரியிலிருந்து வரிசை அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்காக அந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் சம்பளங்கள் மற்றும் படிகளாக நிறுவகத்தினால் ரூபா 1,987,240 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. ரூபா | இந்த இரண்டு உத்தியோகத்தர் களுக்கான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி ஒழுக்காற்று விசாரணைக்காக நிறுவகத்தின் 15 ஏனைய ஊழியர்களினால் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. கட்டுப்பாட்டு சபையின் தீர்மானமொன்றின் அடிப்படையில் இந்த இரண்டு உத்தியோகத்தர்களும் அமைச்சுக்கு இணைக்கப் பட்டிருக்கின்றமை ஒழுக்காற்று | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் தொகுதி II இன் அத்தியாயம் XLVIII இன் 31 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகம் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 13,794,878 ஆகக் காணப்படும் மொத்த ஊழியர்களின் ஊதிய செலவினத்தில், இந்த உத்தியோகத்தர்களுக்கான பங்களிப்பு 14 சதவீதமாகக் காணப்பட்டிருந்தது. இருப்பினும், வரிசை அமைச்சிலிருந்து அவர்களினை இணைத்துக் கொண்ட திகதியிலிருந்து நிறுவகத்தின் செயலாற்றலுக்காக இந்த உத்தியோகத்தர் களிடமிருந்து எவ்விதப் பங்களிப்பும் பெறப்பட்டிருக்கவில்லை. | விசாரணையினை நடாத்துவதற்கு இடைஞ்சலொன்றாகக் காணப்படக்கூடும். | |
| (இ) | முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றில் குற்றவாளியொன்றாக குற்றஞ்சாட்டப்பட்ட சாரதியொருவரிடமிருந்து நிறுவகத்தினால் அறவிடப்பட வேண்டிய முழுமையான பணத்தினை வேண்டுகோள் விடுத்து கோரிக்கை கடிதமொன்றை அனுப்புவதற்கு கட்டுப்பாட்டு சபை தீர்மானித்திருந்த போதிலும், கோரிக்கைக் கடிம் அனுப்பப்பட்டிருக் காமையினால் ரூபா 539,128 நட்டமொன்று ஏற்பட்டது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட விடயத்தை ஏற்றுக் கொள்கின்றோம். நிறுவகத்தில் சட்ட உத்தியோகத்தரொருவர் காணப்படாமையின் காரணமாக இந்த விடயம் தாமதமடைந்து காணப்பட்டதுடன், கோரிக்கை கடிதத்தினை அனுப்புவது சட்ட உத்தியோகத்தரொருவர் மூலாகவே மேற்கொள்ளப்படல் வேண்டுமா என்பதை கட்டுப்பாட்டு சபையிடமிருந்து விசாரணை செய்ய வேண்டியுள்ளது. | கட்டுப்பாட்டு சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அமுல்படுத்தப் படுவதனை கண்காணிக்க உள்ளக பரீட்சிப்பு முறையொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு பிரச்சினை | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 14 இல் பிரசுரிக்கப்பட்ட செய்தித்தாள் விளம்பரத்தின் மூலம் வெளிவாரியான வளவாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டிருந்த போதிலும், வளவாளர்களினை தெரிவு செய்வதற்கு முறையான முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்காததுடன் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமின்றி விடயத் துறையின் பிரகாரம் 85 வளவாளர்களினை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2018 திசெம்பரில் கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பிக்கப் படவுள்ளது. | சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்காமை தொடர்பில் விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட 2 ஆராய்ச்சி முன்மொழிவுகளின் அமுல்படுத்தல் நோக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் 01 ஆம் இலக்கத்தின் கீழ் அது குறிப்பிடப்பட்டுள்ளது | மேற்கொள்ளப்படும் ஏதேனும் ஆராய்ச்சியின் நோக்கங்கள் அடிப்படையாக குறித்துரைக்கப்படல் வேண்டும் |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆராய்ச்சி முன்மொழிவுகளுக்காக பல்கலைக்கழகமொன்று தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதற்காக | கற்கை செயற்பாடொன்றாக அது காணப்பட்டமையினால் | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் |

| | | |
|---|---|---|
| 2018 பெப்ரவரி 20 இல் கட்டுப்பாட்டு சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு முற்பண பணமாக ரூபா 1,183,982 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், செலுத்துகைக்காக பற்றுச்சீட்டொன்று பெறப்பட்டிருக்காததுடன் விலைமனு பாதுகாப்பொன்றுகூட பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த ஆராய்ச்சி கற்கையின் நோக்கங்கள் கூட குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | விலைமனு பாதுகாப்பொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 நிதிகளின் குறைப்பயன்பாடு

| **கணக்காய்வு பிரச்சினை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 44,000,000 மீண்டெழும் ஏற்பாடுகள் மற்றும் பயிற்சியளித்தல் செலவினத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 30,000,000 மூலதன ஏற்பாடுகளில் ரூபா 18,551,000 தொகையொன்று அல்லது 25 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மூலதன செலவினத்தின் குறைவடைவுக்கான காரணம் நிதிகளினைப் பெறுவதில் தாமதமாகக் காணப்பட்டதுடன் வெற்றிடங்கள் காணப்பட்டமை காரணமாக மீண்டெழும் செலவினம் குறைவடைந்து காணப்பட்டது. | பயன்படுத்த முடியுமாகக் காணப்படுகின்றவை களுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

| **கணக்காய்வு பிரச்சினை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| நிறுவகத்திற்கான புதிய கட்டிடமொன்றின் நிர்மாணம் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அடித்தளத்தினைக் குவித்தல் (Pilling Foundation) ரூபா 44,757,072 ஏற்பட்டதன் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அடித்தளத்தின் நிர்மாணங்களுக்கு முன்னர் குவியல் தொப்பியுடன் (Pile Cap) தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால், குவியல்களின் (piles) வலிமையை தாங்கிப்பிடித்தல் முடிவுக்குக்கொண்டுவர முடியாது காணப்பட்டமையினால் 2014 ஆம் ஆண்டிலிருந்து நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்தது. | புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பது தொடர்பில் அமைச்சரவைக்கு அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கமைய, முன்னர் ஏற்பட்ட செலவினங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப் பட்டுள்ளதுடன் எதிர்கால நிர்மாண வேலைகள் தொடர்பில் மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | நிறுவகத்தின் கட்டிட நிர்மாணங்கள் பரீட்சிக்கப்பட வேண்டியதுடன் அரசுக்கு நட்டங்கள் ஏற்படாது எதிர்கால வேலைகளுக்கான உடனடி நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு பிரச்சினை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் | கட்டுப்பாட்டுச் சபையினை நியமிப்பதற்கு தாமதம் | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| பந்தியின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 48 நாட்கள் தாமதமொன்றின் பின்னர் 2019 ஏப்ரல் 18 இல் மாத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்பட்டமை காரணமாக, நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல் தாமதமடைந்து காணப்பட்டது. | எடுக்கப்படல் வேண்டும். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 யூன் 01 இல் நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வாளரின் இராஜினாமாவின் பின்னர் உள்ளகக் கணக்காய்வாளரின் பதவி தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்படுகின்றது. | மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன் உடனடியாக வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வாளரொருவர் காணப்பட வேண்டும். ஆகையினால், பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.3 சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவு முகாமைத்துவ உள்ளூராட்சி சபைகளின் பிரதான செயற்பாடொன்றாகக் காணப்படுகின்ற போதிலும், அது தொடர்பில் இலங்கை உள்ளூராட்சி | இந்த ஆண்டின் போது நடாத்துவதற்கு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும். |

நிறுவகத்தினால் அவற்றுக்காக எவ்வித பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அல்லது பயிற்சிப் பட்டறைகளும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2030 நிகழ்ச்சிநிரல் தொடர்பில் இலங்கை உள்ளூராட்சி நிறுவகம் அறிந்திருக்காமையினால், நோக்கங்கள், இலக்குகள் மற்றும் மைல்கற்களினை இனங்காணுதல், அந்த இலக்குகள் மற்றும் குறிகாட்டிளினை அடைந்துகொள்ளல், அந்த இலக்குகளின் அடைவுகளினை அளவீடு செய்தல் போன்ற மேற்குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |